C.C.No.28/2024

**PW-3 Ponnambalam, S/o.Sangupillai, Aged – 55 years.**

Date : 22.05.2026

(A1, A2 absent. Petition filed and allowed.)

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

1. இந்த வழக்கின் புகார்தாரர் தனபால் குடும்பத்தாருக்கும் எதிரியின் குடும்பத்தாருக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. நான் போலிஸ் விசாரணையில் இரண்டு குடும்பத்தாருக்கு நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 08.02.2024ம் தேதி புகார்தாரர் தனபாலின் மகன் ஐயப்பன் எதிரியின் அம்மாவை தாக்கியதாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. போலிஸ் விசாரணையில் பாலசுப்பிரமணியன் மனைவி லட்சுமி கொடுத்த புகாரின் பேரில் 08.02.2024ம் தேதியில் ஐயப்பனை தாங்கள் கைது செய்து குன்னூர் சிறையில் அடைத்துள்ளீர்கள் என நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கு சம்பவம் சத்தம் கேட்டு தான் நான் அங்கு வந்தேன் என்றால் அடிதடி சத்தம் கேட்டு தான் போய் பார்த்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில், நேரத்தில் என்னுடன் சுமார் 10, 15 நபர்கள் அங்கிருந்தார்கள். போலிசார் என்னை மறுநாள் காலையில் தனபால் வீட்டு அருகே வைத்து விசாரித்தார்கள். என் வீட்டிற்கும் தனபால் வீட்டிற்கும் இடையே சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும். மறுநாள் போலிசார் தான் சம்பவயிடத்திற்கு என்னை அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்த இடத்தில் எவ்வளவு நேரம் நான் அங்கு இருந்திருப்பேன் என்றால் சுமார் 15 நிமிடங்கள் இருந்திருப்பேன்.

3. வழக்கு சம்பவம் வீட்டிற்குள் நடந்ததா, வெளியில் நடந்ததா என்றால் வீட்டிற்குள் வைத்து தான் இரண்டு பேரும் கட்டையில் அடித்துக்கொண்டார்கள். வீட்டிற்குள் நடந்த சம்பவத்தை நான் பார்த்திருக்க இயலாது என்றும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கும் போது சம்பவயிடத்தில் 10, 15 நபர்கள் இருந்தார்கள் என கூறினேனா என்றால் பொதுவாக கூறினேன். பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. சம்பவயிடத்தில்

மின்விளக்கு வசதி இல்லை என்றால் அங்கு இல்லை, வீட்டிற்குள் மின்வசதி இருந்தது.

4. நான் போலிஸ் விசாரணையில் எதிரிகள் தனபால் வீட்டின் எதிரே வந்து தனபாலை திட்டினார்கள் என்று தான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது முன்பு போலிசார் வேறு யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் எனது ஊர்க்காரர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம் என்பதாலும் மின் வசதி இல்லாததாலும் சம்பவம் வீட்டிற்குள் நடைபெற்றுள்ளதாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்திக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை -** இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.